ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**ஓங்காரக்குடிலுக்கும் தொண்டர் பெருமக்கட்கும்**
**விசுவாவசு ஆண்டு தைப்பூச விழா மற்றும் தை பௌர்ணமி**
**இந்த விழாவிற்கு உண்டான அருளாசி விளக்கமும் தர வருகிறோம்.**
**மகான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து ஆசி விளக்கம்**

01.02.2026

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப் பெருமானை தொழுதேற்றி இனிதே
வரமென அரங்கன் யானும் வல்லமைபட
விசுவாவசு ஆண்டு தை முழுமதி

2. தைப்பூச விழாவாம் இந்த நன்னாளில்
ஓங்காரக்குடிலுக்கும் குடில் தொண்டர்
பெருமக்கட்கும் உலகளாவிய வருகை புரிந்துள்ள
மக்களுக்கும் அரங்கன் யான் அருளாசிதன்னை

3. இந்தவித காலம் ஆசியாகவும்
அனுகூலமாகவும் தர வருகின்றேன்
அப்பனே இந்தவித நன்னாளில்
அரங்கன் தடத்தில் எல்லா மகாசக்திகளும்

4. வேலவன் தலைமையேற்று நடத்தும்
உயர்விழா என்பதாலே இங்கு
ஞானியர் படைகளும் மகா சக்திகளும்
எல்லை தெய்வங்களும் முப்பெருந்தேவியரும்

5. மும்மூர்த்திகளும் சூட்சுமமாய் வந்து
இந்த விழாவை சிறப்பிக்கும் வண்ணம்
அவரவர்கள் ஆசியும் அனுகூலமும் தந்துள்ளார்
உள்ளபடி ஓங்காரக்குடிலின் தொண்டு சிறப்பு

6. உள்ளபடி ஓங்காரக்குடிலின் தர்மத்தை
மகா சக்தியாக்கி இனிதே
அந்த தர்மத்தில் இந்த சக்திகளெல்லாம்
கலந்து வரும் அன்பர்கட்கு

7. அருளமுதாகவும் அவர்கட்கு
ஆற்றல் தருகின்ற மகா
சக்தியாகவும் வரம் தந்துள்ளனர்
உள்ளபடி விழாவில் ஓங்காரக்குடிலின்

8. தொண்டும் சேவையும் நிர்வாகத்தின் சிறப்பும்
அரங்கன் யான் கண்டு மகிழ்ந்தேன்
மக்கள்படை இன்னும் வருகின்ற
விழாவில் எல்லாம் அளவிலா வண்ணம்

9. பெருக பெருக அரங்கன் என் கொள்கையும்
அரங்கனின் தர்மமும் உலகமெங்கும் பரவக்கூடும்
ஓங்கார குடிலின் சேவையை
உலகம் அறிந்து இனிதே

10. உலகே பின்பற்றும் வண்ணம்
மாற்றங்கள் அற்புதங்களும் நடக்கக்கூடும்
ஆகவே அரங்கன் யான்
இந்த விழாவின் தொண்டை மெச்சியும்

11. விழாவின் தர்மத்தை மகிழ்ந்தும்
நிறைவு கொண்டும் ஏற்று
இனிதே ஆசிதனை வழங்குகின்றேன்
அப்பனே இந்த விழாவில்

12. தொண்டாற்றிய என் தொண்டர்
பெரும் மக்கட்கும் கலந்து கொண்ட
மக்கட்கும் தர்மத்தில் பொருளுதவி
செய்து கொண்டு வந்தவர்கட்கும்

13. அனைவருக்கும் அரங்கன் யான் சூட்சுமமாய்
தீட்சையும் ஆசியுமாக தந்துள்ளேன்
உள்ளபடி என் சீடன் ராம்குமார்
கரம்பட உயர்வாக வருவோர்க்கு

14. இன்று தீட்சையும் வழங்கியுள்ளேன்
அச்சமற என்பால் முழுமைபட
சரணாகதி கொண்டு என்
தொண்டில் இருப்போர் யாவர்க்கும்

15. அரங்கன் யான் எல்லாமுமாய்
இருந்து வழிநடத்தி காப்பேன்
உடல் பொருள் மனம் அனைத்தும்
உடைமைகள் என யாவற்றிலும்

16. யானே இருந்து அவர்கள் விருப்பம்
அத்தனையும் நிறைவேற்றி

அரங்கன் யான் இனி பிறவாத
பெரும் பேற்றுக்கு உண்டான

17. மகா வரமும் தந்து
அருள் புரிந்து காப்பேன்
அச்சமற அரங்கன் என் வழி
உயர்வழி என்பதாலே இந்த சன்மார்க்க

18. நெறியை ஏற்று ஆங்காங்கே
உள்ள கிளை சங்கங்கள் எல்லாம்
தொடர்ந்து அரங்கன் என் கொள்கையை
மக்களுக்கு சொன்ன வண்ணமும்

19. தர்மத்தை தடைபடா தொடர்ந்து நடத்தி
உயர்தொண்டாக புரிந்து வர
ஆங்காங்கே அரங்கன் யான்
இறங்கி அனைத்து கிளைகளிலும்

20. அற்புதம் நிகழ்த்துவேன் ஓங்காரக்குடிலின்
இந்த மாதர்மத்துக்கு ஒருபோதும்
குறைவில்லா வண்ணம் பொருளாதார பலமும்
தொண்டர் பெருமக்கள் பலமும்

21. கூட்டி காப்பேன் அச்சமற மாதொண்டு
புரியும் தொண்டர் பெருமக்கள் யாவருக்கும்
மரணமில்லாப் பெருவாழ்வும் தந்து பேரருள் புரிவேன்
அரங்கன் யான் அருளிய அருளாசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி